தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### திருச்சுழியில் விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம்

திருச்சுழியில் வட்டார தொழில் நுட்ப விவசாயிகள் ஆலோசனைக் கூட்டம் ம.ரெட்டியபட்டி வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்றது. விருதுநகர் மாவட்ட உழவர் பயிற்சி நிலைய இணை இயக்குநர் செண்பகராஜ் தலைமை வகித்து, விரிவாக்கத் திட்டத்தின் நடப்பாண்டு பணிகள் பற்றி விரிவாக எடுத்துரைத்தார். வேளாண்மை உதவி இயக்குநர் நாச்சியார் அம்மாள் தொடக்க உரை ஆற்றினார். வேளாண் அறிவியல் மைய பேராசிரியை மண்மாதிரி சேகரம் பற்றி எடுத்துரைத்தார். வேளாண்துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டு இந்த திட்டத்தில் உள்ள செயல்முறை குறித்த பணிகள் மற்றும் தீர்மானங்கள் குறித்து விவாதித்தனர். முடிவில் வேளாண் அலுவலர் மூர்த்தி நன்றி கூறினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை துறை சார்ந்த அலுவலர்கள்செய்திருந்தனர்.

### நெல்லை மாவட்டத்தில் வேகமாக நிரம்பும் குளங்கள்: மீன் உற்பத்தி அதிகரிக்க வாய்ப்பு!

திருநெல்வேலி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் குளங்கள் நிரம்பி வருவதால் மீன் உற்பத்தி அதிகரிக்கும் எனத் தெரியவந்துள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தைப் பொருத்தவரை ராதாபுரம் வட்டம், உவரியில் மட்டுமே பெரிய அளவிலான கடல்மீன் சந்தை உள்ளது. இதுதவிர தூத்துக்குடி, முட்டம் பகுதிகளில் இருந்துதான் அதிகளவில் கடல்மீன்கள் இம் மாவட்டத்துக்கு இறக்குமதியாகின்றன. குறிப்பிட்ட சில மாதங்களுக்கு மட்டும் ராமேசுவரத்தில் இருந்தும் மீன்கள் வருகின்றன. வஞ்சிரம், ஊளி, பாறை, உளுவை, நெத்திலி, சீலா, பால்சுறா, மஞ்சப்பாறை, வெளமீன், இறால், சாளை, செந்நவரை, கடல்

நண்டு போன்றவை இம் மாவட்டத்தில் அதிகம் விற்பனையாகின்றன. கடல் மீன்களைத் தவிர குளங்களில் தேங்கும் மழைநீரில் மீன்வளர்ப்புத் தொழில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இம் மாவட்டத்தில் மொத்தம் 2449 குளங்கள் உள்ளன. வடகிழக்குப் பருவமழை இந்த ஆண்டில் நன்றாகப் பெய்து வருவதால் குளங்கள் வேகமாக நிரம்பி வருகின்றன. வேளாண் துறையின் 31-10-2014 தேதிய கணக்கெடுப்பின்படி மாவட்டத்தில் 311 குளங்களில் 2 மாதங்களுக்கு மேல் நீர்இருப்பு இருக்கும் என்றும், 306 குளங்களில் 3 மாதங்களுக்கு நீர்இருப்பு இருக்கும் என்றும் தெரியவந்துள்ளது. இதுதவிர 712 குளங்களில் ஒரு மாத நீர்இருப்பு உள்ளதாகத் தெரியவந்துள்ளது. கணக்கெடுப்புக்குப் பின்பு இரண்டு வாரங்கள் கழிந்துள்ளதால் குளங்களின் நீர்வரத்து மேலும் கணிசமாக உயர்ந்துள்ளது. குறைந்தபட்சம் இரண்டரை மாதங்களாவது நீர்இருப்பு உள்ள குளங்களில் மட்டுமே மீன்வளர்ப்பு சாத்தியமாகும். பொதுப்பணித் துறை, உள்ளாட்சித் துறைகளின் கீழ் மீன்வளர்ப்புக்கு குளங்கள் ஏலமுறையில் விடப்படுகிறது. குளத்து மீன்களில் கெண்டை, விரால், கெளுத்தி, விலாங்கு, வெளிச்சி, ஆரல், தேளி போன்றவை மக்களால் அதிகம் விரும்பிச் சாப்பிடப்படுகிறது. 1400 டன் வரை உயரும்: இது தொடர்பாக மீன்உற்பத்தி குத்தகைதாரர் ஒருவர் கூறுகையில், திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த ஆண்டில் போதிய மழையின்மையால் உள்நாட்டு நீர்நிலை மீன்உற்பத்தி மிகவும் சரிந்தது. வழக்கமாக முழுமையான மழையளவை எட்டும்போது இம் மாவட்டத்தில் அதிகபட்சமாக 1350 டன் மீன் உற்பத்தி கிடைக்கும். ஆனால், கடந்த 3 ஆண்டுகளாக அந்த அளவுக்கு மீன் உற்பத்தி இல்லை. ஆனால், இந்த ஆண்டில் குளங்களில் நீர்இருப்பு கணிசமாக உயர்ந்துள்ளது. அதனால் கடந்த ஆண்டைவிட கூடுதலாக 100-க்கும் மேற்பட்ட குளங்களில் மீன்உற்பத்தி செய்ய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அதனால் வழக்கமான அதிகபட்ச சராசரியான 1,350 டன் மீன் உற்பத்தி என்பது இந்த ஆண்டில்

1,400 டன்னாக அதிகரிக்க வாய்ப்புள்ளது. அதேநேரத்தில் மீன்குஞ்சுகள் தட்டுப்பாடின்றிக் கிடைக்க மீன்வளத் துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும். தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி போன்றவற்றில் மீன்வளர்ப்பு குத்தகைதாரர்களுக்கு சிறப்புப் பயிற்சி வகுப்புகள் எடுக்க வேண்டும். இதேபோல சில பகுதிகளில் கழிவுநீர் கலப்பு போன்றவற்றால் குளங்கள் பெரிதும் மாசடைந்து வருகின்றன. இதனால் மீன்கள் விற்பனைக்கு ஏற்ற நேரத்தில் செத்து மிதக்கும் நிலை உள்ளது. அதைத் தடுக்க மாவட்ட நிர்வாகம் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றனர். மானியங்களின் விவரம்: இது தொடர்பாக திருநெல்வேலி மாவட்ட மீன்வளத் துறை அதிகாரிகள் கூறியதாவது: இம் மாவட்டத்தில் உள்நாட்டு நீர்நிலைகளில் மீன்உற்பத்தியை அதிகரிக்கவும், பல்நோக்கு பண்ணைக் குட்டைகள் அமைத்து நன்னீர் மீன் உற்பத்தியைப் பெருக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கூட்டுமீன் வளர்ப்பிற்கு பெருங்கெண்டை மீன் இனங்களே பரிந்துரைக்கப்படுகின்றன. கட்லா, ரோகு, மிர்கால், வெள்ளிக் கெண்டை, புல்கெண்டை, சாதாக் கெண்டை ஆகியவை குளங்களில் அதிகம் உற்பத்தியாகும். மீன்வளர்ப்புக்கு பல்வேறு மானியங்களும் உள்ளன. தமிழகத்தில் சென்னை, நீலகிரி மாவட்டங்களைத் தவிர்த்து இதர மாவட்டங்களில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்புக் குழுத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட புதிய பல்நோக்கு பண்ணைக் குட்டைகளில் மீன்வளர்ப்புக்கு மானியம் அளிக்கப்படுகிறது. அதன்படி ஒரு அலகில் (900 ச.மீ.) மீன்வளர்ப்புப் பணியை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.35 ஆயிரம் என்றால், அதற்கு அரசு ரூ.17 ஆயிரத்து 500 உள்ளீட்டு மானியம் வழங்குகிறது. 2014-15ஆம் ஆண்டு தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பல்நோக்கு பண்ணைக் குட்டைகளுக்கு மீன்குஞ்சு மற்றும் மீன்தீவனம் மானிய அடிப்படையில் பெற விரும்புவோர் மீன்துறை உதவி இயக்குநர், 42, 26 ஆவது குறுக்குத்தெரு, மகாராஜநகர், திருநெல்வேலி-11 என்ற முகவரியை அணுகலாம் என்றனர்.

<u>**அதிராம்பட்டினத்தில் 23.8 மி.மீ. மழை**</u>

தஞ்சாவூர் மாவட்டத்தில் அதிகபட்சமாக 23.8 மி.மீ. மழை பெய்தது.

மாவட்டத்தில் சில நாள்களாக மழை இல்லாத நிலையில் செவ்வாய்க்கிழமை பகலில் மீண்டும் பெய்யத் தொடங்கியது. மாவட்டத்தில் செவ்வாய்க்கிழமை பகலில் மாலை 4 மணி வரை பதிவான மழையளவு (மில்லிமீட்டரில்): அதிராம்பட்டினம் 23.8, மதுக்கூர், பட்டுக்கோட்டை தலா 20, ஈச்சன்விடுதி 15.4, கும்பகோணம் 8.4, திருவிடைமருதூர் 8, பேராவூரணி 7, மஞ்சலாறு 4.6, ஒரத்தநாடு 4, நெய்வாசல் தென்பாதி 3.2, வெட்டிக்காடு 2.2, பாபநாசம் 2, தஞ்சாவூர் 1.2.

**இன்றைய வேளாண் செய்திகள்**

<u>**சர்க்கரை உற்பத்தியில் விறுவிறுப்பு**</u>



புதுடில்லி:இந்தியாவின் சர்க்கரை உற்பத்தி, நடப்பு 2014–15ம் பருவத்தில் (அக்.,–செப்.,) இதுவரையில், 22 சதவீதம் அதிகரித்து, 5.6 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இது, கடந்த பருவத்தின் இதே காலத்தில், 4.62 லட்சம் டன்னாக இருந்தது என, இந்திய சர்க்கரை ஆலைகள் கூட்டமைப்பான 'இஸ்மா' தெரிவித்துள்ளது.மத்திய அரசு, நடப்பு பருவத்தில், சர்க்கரை உற்பத்தி, 2.50 கோடி டன்னாக இருக்கும் தெரிவித்துள்ள நிலையில், 'இஸ்மா' இதன் உற்பத்தி, 2.50–2.55 கோடி டன் என்ற அளவில் இருக்கும் என, மதிப்பீடு செய்துள்ளது.கடந்த 2013–14ம் பரு-

வத்தில், இதன் உற்பத்தி, 2.44 கோடி டன்னாக இருந்தது. நடப்பாண்டில், உள்நாட்டில் சர்க்கரைக்கான தேவை, 2.47 கோடி டன்னாக இருக்கும் என, கணக்கிடப்பட்டுள்ளது.நடப்பு பருவத்திற்கான சர்க்கரை உற்பத்தி தற்போது தான் துவங்கியுள்ளது. குறிப்பாக, மகாராஷ்டிரா, கர்நாடகா மற்றும் குஜராத்தில், இதன் உற்பத்தி விறுவிறுப்படைய துவங்கியுள்ளது. அதேசமயம், உத்தரபிரதேசத்தில் உள்ள சர்க்கரை ஆலைகள், இம்மாத இறுதி வாக்கில் உற்பத்தியை துவங்கும் என, எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், மாநில அரசு, கரும்பிற்கான விலையை உயர்த்தாதது மற்றும் வரி சலுகைகளை அறிவிக்காததால், உற்பத்தியில் ஈடுபடப் போவதில்லை என, உத்தரபிரதேச சர்க்கரை ஆலைகள் மிரட்டல் விடுத்துள்ளதாக ‘இஸ்மா’ தெரிவித்துள்ளது.நடப்பு பருவத்தில், உபரி சர்க்கரை கையிருப்பு, 20 லட்சம் டன்னாக இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.கடந்த 2013–14ம் பருவத்தில், இந்தியா 21.17 லட்சம் டன் சர்க்கரையை ஏற்றுமதி செய்துள்ளது.

**<u>பாரம்பரிய "பூங்கார்' நெல்லுக்கு, புத்துணர்வூட்டும் விவசாயி</u>**



ராமநாதபுரம்- மதுரை ரோட்டில் 10 கி.மீ., தூரத்தில் உள்ள எட்டியவல் கிராமத்தை ஒட்டியுள்ள ரயில்வே தண்டவாளத்தை கடந்து, எந்த பக்கம் திரும்பி பார்த்தாலும் பச்சை பசேல் என, கண்களுக்கு விருந்தளிக்கும் வகையில் பல ஏக்கர் பரப்பளவில் வயல் காணப்படும். உள்ளே நுழைந்தால், மாப்பிள்ளை சம்பா, கருங்குருணை, அம்பாசமுத்திரம், பூங்கார் என பாரம்பரியமிக்க ரகங்களான நெல் சாகுபடியும், கேழ்வரகு, கம்பு, குதிரைவாலி, சோளம், உளுந்து ஆகிய சிறுதானிய பயிர்களும் புஞ்சை நிலங்களில் பல ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு

உள்ளது. செடிமுருங்கை உள்ளிட்ட கீரைவகைகள், பண்ணை குட்டைகளில் மீன்வளர்ப்பு, நாட்டுக்கோழி வளர்ப்பு, ஆடு, காங்கேயம் போன்ற உயர்ரக மாடுகள் வளர்ப்பு என அடுக்கிக்கொண்டே போகலாம். விவசாயி ஆர்.முருகேசன் கூறியதாவது: யோகா ஆசிரியரான, எனக்கு விவசாயத்தில் மிகுந்த ஈடுபாடு உண்டு. அழிந்துவரும் விவசாயத்திற்கு புத்துணர்வூட்டும் வகையில் பாரம்பரியமிக்க நெல், தானியங்கள் வளர்ப்பில் ஈடுபட்டுள்ளேன். மறைந்த இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் பலமுறை எனது தோட்டத்திற்கு வந்துள்ளார். அவரின் ஆலோசனையின் பேரில் முழுக்க...முழுக்க இயற்கை உரம் மூலம் விவசாயம் செய்து வருகிறேன். தமிழர்களின் பாரம்பரிய நெல்லான மாப்பிள்ளை சம்பா நெல் 2 ஏக்கரிலும், பூங்கார் 2 ஏக்கரிலும், அம்பாசமுத்திரம் 2 ஏக்கரிலும் நடவு செய்துள்ளேன். இதில், பூங்கார் வறட்சியை தாங்கி விளையும் நெல் பயிராகும். 70 முதல் 80 நாட்களில் மகசூல் கிடைக்கும். தற்போது இந்த ரக நெல் மகசூல் பருவத்தை எட்டியுள்ளது. நடவு செய்த நாள் முதல் "பஞ்ச கவ்யம்' எனும் உரம் போட்டு வருகிறேன். இந்த உரம், மாட்டுச்சாணம், கோமியம், வெல்லம் ஆகியவற்றை ஒன்றாக சேர்த்து தயாரிக்கப்பட்டது. இதுபோன்ற இயற்கை உரமிடுவதால் பயிர் நன்றாக வளரும். பூச்சி தாக்குதல் இருக்காது. ஏக்கருக்கு 30 மூடை பூங்கார் ரக நெல் மகசூல் கிடைக்கிறது. ஒரு மூடை 1,500 ரூபாய் வரை விலை போகிறது. இதனால், 2 ஏக்கர் பூங்கார் நெல் சாகுபடி மூலம் ஆண்டிற்கு ஒரு லட்ச ரூபாய் வீதம் லாபம் கிடைத்து வருகிறது. இதுதவிர, நாவல், நெல்லி, மா, வேம்பு, புங்கன், மகோகனி உட்பட 3,500க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடவு செய்துள்ளேன். பூசணி, வெண்டை, கத்திரி, கொத்தவரை உள்ளிட்ட காய்கறி செடிகளையும் நடவு செய்துள்ளேன். பயிர்களுக்கு தேவையான தண்ணீர் கிடைப்பதற்கு 4 இடங்களில் 21 அடி ஆழமுள்ள பண்ணை குட்டைகளை வெட்டியுள்ளேன். "மோட்டார் பம்பு செட்' மூலம்

அனைத்து பயிர்களுக்கும் தண்ணீர் பாய்ச்சி வருகிறேன். எனது தோட்டம் மூலம் ஆண்டிற்கு 30 லட்ச ரூபாய் வரை சம்பாதித்து வருகிறேன், என்றார். ஆலோசனை பெற 94434 65991ல் தொடர்பு கொள்ளலாம். **- ஆர். ராஜ்குமார், ராமநாதபுரம்.**

***சின்ன சின்ன செய்திகள்***



**ஒட்டு வெண்ணெய் பழம் டி.கே.டி.1** : அவகாடோ என்று அழைக்கப்படும் வெண்ணெய் பழத்தில் அதிகமாக கொழுப்புச்சத்து (30 சதம்) உள்ளதாகும். எனவே இதற்கு "பட்டர் ஃப்ரூட்' என்ற பெயரும் உண்டு. தமிழில் வெண்ணெய் பழம் என்று அழைக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் கீழ்பழனி மலை, சிறுமலை, நீலகிரி மலையின் அடிப்பகுதி, கோயம்புத்தூர் சேர்வராயன் மலை, குற்றாலம் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியின் அடிவாரங்களிலும் சாகுபடி செய்யப்படுகிறது. "தடியன்குடிசை 1' ஒட்டு வெண்ணெய்ப்பழ இரகம் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் தடியன்குடிசையில் வெண்ணெய்ப்பழ கருத்தொகுப்பிலிருந்து தேர்வு செய்யப்பட்டு 1996ல் வெளியிடப்பட்டது. இதன் மரம் ஓரளவு பரவும் தன்மையும், மிதமாக உயர்ந்து வளரும் தன்மையும் கொண்டிருப்பதால் அதிக மரங்கள் ஒரு குறிப்பிட்ட பரப்பில் நடுவதற்கு ஏற்றவையாகும். ஒரு மாதத்தில் 264 கிலோ பழமும், ஒரு எக்டரில் 26 டன் மகசூலும் கிடைக்கும். பழத்தில் 23.8 சதம் கொழுப்புச்சத்து, 1.35 சதம் புரதச்சத்தும் அடங்கியுள்ளது. தகவல் : தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், தடியன்குடிசை, திண்டுக்கல் மாவட்டம். **அத்தி மோயா சீத்தாப்பழம்** : இப்பழம் இதய வடிவம் கொண்டது. சதைப்பற்று அதிகமாகவும், தோல் பெரிதாகவும் இருக்கும். இது மற்ற சீத்தாப்பழங்களைப் போல் சதைப்பிரிவுகளை

கொண்டிருக்கிறது. இப்பழம் வனிலா போன்ற சுவை கொண்டது. இப்பழச்சாற்றில் ஐஸ்கிரீம் மற்றும் பழக் கூழ் தயாரிக்கலாம். மொத்த கரையும் சர்க்கரையின் அளவு 22 பிரிக்ஸ். தகவல் : மண்டல ஆராய்ச்சி நிலையம், அருப்புக்கோட்டை. **ஆப்பிள் கே.கே.எல்.1** : பார்லினிஸ் பியூட்டி இரகத்திலிருந்து தேர்வு செய்யப்பட்டது. இது குட்டையான மிதமாக பரவக்கூடிய குறைந்த குளிர்நிலைக்கு ஏற்ற இரகமாகும். ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் காய்ப்பு விடத் தொடங்கி ஒரு மாதத்திற்கு 250-300 பழங்களை தரவல்லது. பழங்களை சிறு அளவில் புளிப்புத்தன்மையுடன் இருக்கும். பழங்களின் மொத்த கரையும் தன்மை 14-16 சதமாகும். தகவல் : தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், கொடைக்கானல். **மஞ்சள்**: கோவையிலுள்ள த.வே.ப. கழகத்தில் இயங்கி வரும் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி சந்தை தகவல் மையம் மஞ்சள் விலை விவரம் பற்றிய அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது. இதில் தமிழகத்தில் பெரும்பாலும் ஈரோடு, சேலம் ஆகிய மாவட்டங்களில் நாட்டு மஞ்சள் இரகங்களை பரவலாகப் பயிரிடப்பட்டுள்ளன. இதில் சேலம் நாட்டு ரக மஞ்சள் அதிக விலைக்கு விற்கப்படுகிறது. இந்தியாவில் ஓராண்டுக்கான மஞ்சள் தேவை 75 லட்சம் மூட்டைகள். ஆனால் இந்தியாவில் தற்போது 45 லட்சம் மூட்டைகள் தான் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இதில் தமிழகத்தில் மட்டும் 20 லட்சம் மூட்டைகள் உள்ளன.தற்போது ஒரு குவிண்டால் மஞ்சள் 6500 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா மாநிலங்களில் கடந்த ஆண்டை விட, இந்த ஆண்டு மஞ்சள் சாகுபடி பரப்பு 20 சதவீதம் குறைந்துள்ளது. உற்பத்தி குறைவு, குறைவான இருப்பு ஆகிய காரணங்களால் அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மாதங்களில் ஒரு குவிண்டால் மஞ்சளுக்கு 7,500 ரூபாய் விலை கிடைக்க வாய்ப்புகள் உண்டு. எனவே மஞ்சளை சேமித்து வைத்து அக்டோபர், நவம்பர் மாதங்களில் விற்பனை செய்யலாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. **கொத்தமல்லி**

: விதைப்பதற்காக நிலத்தை இரண்டு அல்லது மூன்று முறை உழுது பண்படுத்த வேண்டும். எக்டருக்கு 1520 டன் தொழுஉரத்தை நிலம் தயார் செய்யும் போது இட வேண்டும். மேலும் 20 கிலோ தழைச்சத்து, 30 கிலோ மணிச்சத்து மற்றும் 20 கிலோ சாம்பல்சத்து தரும் உரங்களை அடியுரமாக இட வேண்டும். அக்டோபர் 15 முதல் நவம்பர் 15 வரை விதைப்பதற்கு ஏற்ற பருவம் விதை அளவு எக்டருக்கு 15-20 கிலோ ஆகும். விதைகளை தூவியோ அல்லது வரிசையில் 30 செ.மீ இடைவெளியில் ஊன்றியோ விதைக்க வேண்டும். முளைப்பைத் துரிதப்படுத்துவதற்கு ஏதுவாக விதைகளை விதைப்பதற்கு முன்பு தண்ணீரில் 6-8 மாலை நேரம் ஊறவைக்க வேண்டும். **பெருஞ்சீரகம் ராபி பருவ நடவு :** முதல் வாரத்தில் நாற்றங்காலில் களை எடுக்க வேண்டும். நாற்றுகளை மாதத்தின் இரண்டாவது பிற்பகுதியில் நாற்றங்காலிலிருந்து பறித்து நட வேண்டும். நிலத்தை தயார் செய்யும் போது எக்டருக்கு 20 டன் தொழுஉரத்தை அடியுரமாக இடவேண்டும். மேலும் 45 கிலோ தழைச்சத்து மற்றும் 45 கிலோ மணிச்சத்து உரத்தை நடவுக்கு முன் அடியுரமாக இடவேண்டும். நடவு செய்தவுடன் நீர் பாய்ச்ச வேண்டும். பின்னர் 15-20 நாட்கள் இடைவெளியில் நீர் பாய்ச்ச வேண்டும். **- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## <u>கஷ்டத்தில் கை கொடுக்கும் தென்னை</u>

"தானுண்ட நீரை தலைமேல் தருவது தென்னை" பெத்த பிள்ளை சோறு போடா விட்டாலும் நட்டபிள்ளை சோறு போடும்", - போன்ற நம்பிக்கை கேரள மக்களிடம் அதிகம் உள்ளது. புஞ்சை பயிர்களான எள், கொள், கடலை, காய்கறிகள், பருத்தி, பயறு, அவரை, துவரை, மொச்சை, மிளகாய், மல்லி, கடுகு என பயிர் செய்யும்போது, தென்னை மரங்களை வரப்புப் பயிராக நட்டு வைப்பார்கள். அதுவாக வளரட்டுமே என்று நெல் நட்ட வயல் பரப்புகளிலும் நட்டார்கள். பயிர்களுக்குப் பாய்ச்சிய தண்ணீரை தானுண்டு நல்ல இளநீரையும், தேங்காய்களையும் தந்தது

தென்னை. இளநீர், தேங்காய் விற்றுக் கிடைத்த தொகையில் உரம் வாங்கிப் போட்டு தோட்டப் பயிர்களை வளப்படுத்தி, சிரமமின்றி சங்கிலித் தொடர் போன்று வருமானம் பார்ப்பவர்கள் இன்றும் உள்ளனர். பயிர்களுக்குப் பாய்ச்சிய தண்ணீரையும், கொடுத்த உரத்தையும் எடுத்து வளர்த்து குலை குலையாக இளநீரும், தேங்காயும் தந்து தோட்டத்து உரிமையாளரை உயர்ந்து நிற்கச் செய்தது தென்னை. தென்னை மரத்தில் பழுத்து விழுந்த மட்டை ஓலைகளை சேர்த்துக் கட்டி மரங்களில் சாய்த்து குத்தலாக வைத்தார்கள். அறுவடையான தேங்காய்களை கொட்டகை களில் போட்டு வைத் தார்கள். வேளாண்மை வேலை கள் ஓய்ந்த நேரத்தில் குடும்பமாக உட்கார்ந்து கீற்று பின்னுவதும், கழிவு ஓலைகளை விளக்குமாறு கிளித்தும் கட்டுக்கட்டாக காயவைத்து கட்டுவார்கள். கேரள மாநில கிராமங்களிலும், தமிழ்நாட்டில் கடலூர், கன்னியாகுமரி போன்ற கடலோர மாவட்டங்களில் சிறுவர் முதல் முதியவர்கள் வரை குடிசை தொழிலாக செய்கிறார்கள். பொழுது போக்காகச் செய்யும் தொழில்களால் கைநிறைய காசு பார்க்கிறார்கள். மட்டை, பாளை, கூராஞ்சு (பூமாறு) இவைகளை காயவைத்து கட்டுக் கட்டாக்கி நனையாத இடத்தில் பாதுகாப்பாக வைத்து, மழைக்காலத்தில் அடுப்பு எரிக்கப் பயன்படுத்துவார்கள். திடீர் பணத்தேவை வரும்போது, அறுவடை செய்து கொட்டகையில் போட்டுவைத்த தேங்காய்களை உரித்து மளிகைகடைகளிலும், அதிகம் என்றால் மார்க்கெட்டில் போட்டு பணமாக்கி பணக்கஷ்டத்திற்கு விடுதலை கொடுப்பார்கள். ஒவ்வொரு சீசனிலும் விளைந்த கரும்பு வெட்டாமல் விடுபவர்கள் இன்றும் உள்ளனர். கூலி ஆட்களுக்குக் கூட கொடுக்கத் தேறாது என்று, வெங்காயம், தக்காளி இவைகளை அறுவடை செய்யாமல், மாட்டை விட்டு மேய்க்கும் நிலை உள்ளது. மலிந்தாலும் தேங்காய்க்கும், இளநீருக்கும் மார்க்கெட் எப்போதும் உண்டு. தங்கம் போன்று நினைத்த இடத்தில் விற்க முடியும். கஷ்டம் நம் காலத்தோடு போகட்டும். பிள்ளைகள் காலத்தில் தான் பட்ட கஷ்டம் வரக்கூடாது என்று சிந்திக்கத்

துவங்கியுள்ளார்கள். தென்னை சாகுபடிதான் கஷ்டத்தில் கைகொடுக்கும் என்று நினைத்து முனைப்புடன் தென்னை நடுகின்றார்கள். உலக அளவில் தென்னை சாகுபடியில் இந்தியா மூன்றாம் இடத்தில் உள்ளது. இந்தியாவில் தமிழ்நாடு தென்னை சாகுபடியில் இரண்டாம் இடத்தில் உள்ளது. வருடா வருடம் தென்னை சாகுபடி பரப்பளவு சுமார் 35 விழுக்காடு அளவு பெருகி வருகிறது. தேங்காய்க்கும், இளநீருக்கும் சிறந்த ரகம் திருவையாறு 3 ரக தென்னை, இது ஒரு காலத்தின் கட்டாயக் கண்டுபிடிப்பு. கத்தரிக்காய் போன்று எடை போட்டு தேங்காய் வாங்கும் காலம் வருது. உலக மார்க்கெட்டில் அதிக இளநீர், எடை அதிகம் உள்ள தேங்காய்களுக்கு கிராக்கி அதிகம். இனி நீங்கள் பணக்காரர்கள் தான்.
**-டாக்டர் வா.செ.செல்வம், தென்னை ஆராய்ச்சியாளர், திருவையாறு-613 204. 82204 59341, 04362 - 260 363, 260 003.**

**<u>உற்பத்தி ! : புதிய ரக விதை நெல்... : இரண்டு ஒன்றியங்கள் தேர்வு</u>**

வாலாஜாபாத்: புதிய ரகங்களின் விதை நெல் உற்பத்தியை ஊக்குவிக்கும் விதமாக, ஆந்திர மாநிலத்தின் விதை நெல்லை, காஞ்சிபுரம் மாவட்ட வேளாண் துறை இறக்குமதி செய்துள்ளது. மாவட்டத்தில், காஞ்சிபுரம், வாலாஜாபாத் ஆகிய வட்டாரங்களில், விதை கிராம திட்டம் மூலம், இவற்றை அதிக அளவில் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டு உள்ளது. தமிழகம் முழுவதும் ஆடுதுறை (ஏ.டி.டி.,) 43; ஆடுதுறை 45; ஆடுதுறை 37; ஆடுதுறை 36; ஆடுதுறை 37 ஆகிய விதை நெல்களை, வேளாண் விதை பண்ணையில் உற்பத்தி செய்து, அந்தந்த வட்டார வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம், சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு, விதை நெல் வழங்கப்படுகிறது. இவற்றில், விதை கிராம திட்டத்தின் கீழ், 50 சதவீதம் மானியமும்; விதை கிராம திட்டம் அல்லாத சாதாரண விவசாயிகளுக்கு, ஒரு கிலோ மீது, 5 ரூபாய் மானியமும் வழங்கப்படுகிறது. நிறுத்தம் கடந்த பத்து ஆண்டுகளாக, வேளாண் துறையில் நடைமுறையில் உள்ள, விதைகளுக்கு தமிழக அரசு மானியம்

வழங்குவதையும் மற்றும் விதை கிராம திட்டத்தில் மானியம் வழங்குவதையும், நடப்பாண்டில் இருந்து நிறுத்தியுள்ளதாக கூறப்படுகிறது. இதற்கு உரிய காரணத்தை வேளாண் துறை அதிகாரிகளிடம் கேட்டால், புதிய ரக நெல் விதை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு மட்டும், மானியம் வழங்கி ஊக்குவிப்பதாக, அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

புதிய ரகம்

நடப்பு சம்பா பருவத்தில், நெல் பயிரிட விரும்பும் விவசாயிகளுக்கு, என்.எல்.ஆர்., மற்றும் 34449 பாபட்லா ஆகிய ஆந்திர மாநில புதிய ரக நெல் விதைகளை, தமிழகத்தில் முதல் முறையாக, 26 டன் வரையில், காஞ்சிபுரம் மாவட்ட வேளாண் துறை கொள்முதல் செய்துள்ளது. இந்த ரக விதை நெல்லை, வாலாஜாபாத், காஞ்சிபுரம் வட்டார வேளாண் விரிவாக்க மையங்களில் உள்ள விவசாயிகளுக்கு வழங்கி, விதை பண்ணை மூலமாக, விதை நெல் உற்பத்தி செய்ய, மாவட்ட வேளாண் துறை திட்டமிட்டுள்ளது. இதுகுறித்து, வேளாண் துறை உயரதிகாரி ஒருவர் கூறுகையில், "ஆந்திர மாநிலத்தில் புதிய ரகங்களின் விதைகள், சோதனை ஓட்டமாக வாலாஜாபாத், காஞ்சிபுரம் ஆகிய வட்டாரங்களைச் சேர்ந்த விவசாயிகளின் மூலமாக உற்பத்தி செய்யப்பட உள்ளது. இங்கு உற்பத்தி செய்யப்படும் விதைகளை தமிழகம் முழுவதும் வழங்க, வேளாண் துறை முடிவு செய்துள்ளது," என்றார்.

## யூரியா தேவையான இருப்பு உள்ளது : கலெக்டர் தகவல்

காஞ்சிபுரம்: காஞ்சிபுரம் மாவட்டத்தில், நடப்பு சம்பா பருவத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களுக்கு தேவையான அளவு யூரியா இருப்பு வைக்கப்பட்டு, வினியோகம் செய்யப்பட்டு வருகிறது என, மாவட்ட ஆட்சியர் தெரிவித்து உள்ளார். அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: காஞ்சிபுரம் மாவட்டத்தில் (நவ.,2014)

இம்மாதத்திற்கு தேவையான யூரியா, தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மற்றும் தனியார் விற்பனை நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டு வினியோகம் செய்யப்பட்டு வருகிறது.வடகிழக்கு பருவமழையின் தொடர்ச்சியாக, விவசாயிகளுக்கு தேவையான அளவு யூரியா கிடைத்திட உறுதி செய்திடும் வகையில், கடந்த 12ம் தேதி வேளாண்மை துறை அமைச்சர் தலைமையில் உற்பத்தியாளர்கள் மற்றும் வேளாண்மை உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) ஆகியோரது ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அனைத்து உர தயாரிப்பாளர்களும், விவசாயிகளுக்கும் தேவையான யூரியா வழங்குவதை ஆய்வு செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. தழைச்சத்து அளிக்கக்கூடிய யூரியா மேல் உரமாக நெற்பயிருக்கு ஒரே தருணத்தில் இடாமல், இரண்டு அல்லது மூன்று முறையாக பிரித்து இட வேண்டும். ஒருமுறை மேல் உரம் இட, 10 கிலோ தழைச்சத்தை அளிக்கக்கூடிய 25 கிலோ யூரியா போதுமானது. மேலும், தேவைக்கு அதிகமாக யூரியா இடுவதை தவிர்க்க வேண்டும். யூரியாவை, பயிரின் தேவைக்கு அதிகமாக இட்டால், பூச்சி மற்றும் நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே, விவசாயிகள், யூரியாவை இரண்டு அல்லது மூன்று முறையாக பிரித்து இட்டு, பயனடைய வேண்டும். இவ்வாறு, செய்திக்குறிப்பில் அவர் தெரிவித்து உள்ளார்.

## <u>விவசாயிகளுக்கு மானிய விலையில் வேர்க்கடலை வினியோகம்</u>

நகரி: வேர்க்கடலை பயிர் செய்யும் விவசாயிகளுக்கு, கூட்டுறவு வங்கி மூலம், மானிய விலையில் விதைகள் வழங்கப்பட்டன. சித்தூர் மாவட்டம், நகரி டவுனில், மாவட்ட விவசாய கூட்டுறவு வங்கியின் கிளை இயங்கி வருகிறது. இந்த கிளையின் மூலம், வேர்க்கடலை பயிரிடும் விவசாயிகளுக்கு மானிய விலையில் வேர்க்கடலை விதைகள் வழங்கும் விழா நேற்று நடந்தது. இதில், வங்கியின் சேர்மன் பாலசுரேஷ், நகரி மண்டல தலைவர் மீரா ஆகியோர் கலந்து கொண்டு மானிய விலையில்

வேர்க்கடலை விதைகள் வழங்கினர். மண்டல தலைவர் மீரா பேசுகையில், 'ஒரு விவசாயிக்கு 30 கிலோ எடை கொண்ட வேர்க்கடலை மூட்டைகள் மூன்று வழங்கப்படும். ஒரு மூட்டையின் விலை, 1,800 ரூபாய் ஆகும். இதில், ஒரு மூட்டைக்கு (30 கிலோ) 600 ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. விவசாயிகள், 1,200 ரூபாய் செலுத்தி வாங்கிக் கொள்ளலாம். இத்திட்டம், இம்மாதம், 30ம் தேதி வரை மட்டுமே செயல்படும். விவசாயிகள், மானிய விலையில் வேர்க்கடலை பெற்று, அதிக லாபம் பெற வேண்டும்' என்றார். நிகழ்ச்சியில், மாவட்ட உறுப்பினர் வெங்கடரத்தினம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**<u>நெல் குலைநோயை கட்டுப்படுத்த மருந்து ஆலோசனை</u>**

பொன்னேரி: நெல் குலைநோய், நெல் இலை உறை கருகல் நோய் ஆகியவற்றை கட்டுப்படுத்த, மீஞ்சூர் வேளாண் துறை விவசாயிகளுக்கு, மருந்து ஆலோசனைகளை வழங்கி உள்ளது. மீஞ்சூர் ஒன்றியத்தில், சம்பா பருவத்திற்காக, 26 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில், நெல் பயிரிடப்பட்டு உள்ளது. இதில், பிபிடி -5,204 வகை நெல் பயிரிட்டுள்ள விளை நிலங்களில், நெல் குருத்து பூச்சி, இலை சுருட்டு புழுவின் தாக்கம் அதிகமாக உள்ளது. இதனால் நெற்பயிர்களின் இலைகள் சுருண்டும், பச்சை இன்றி வெண்மையாகவும், குருத்துக்கள் காய்ந்தும் காணப்படும்.

மகசூல் பாதிப்பு

நெல்லில் குலைநோய், நெல் இலை உறை கருகல், நெல் இலை உறை அழுகல் நோய் ஆகியவை ஆகியவை காணப்படுகிறது. மேற்கண்ட நோயின் தாக்கத்தால், நெல் இலைகள் பழுப்பு நிறமாகவும், தீய்ந்தும் காணப்படும். கதிர் வெளிவரும் நிலையில், நோய் தாக்குதலினால், மகசூல் வெகுவாக பாதிக்கும். மேற்கண்ட பூச்சி மற்றும் நோய்களின் தாக்கத்தை கட்டுப்படுத்த வேளாண் துறை மருந்து ஆலோசனைகளை வழங்கி உள்ளது.

வலியுறுத்தல்

மேற்கண்டவற்றில், பூச்சி மருந்தில் ஒன்றினையும், நோய் மருந்தில் ஒன்றினையும் கலந்து, மாலை வேளையில் நெற்பயிர்களில் தெளித்து நோய் தாக்குதலை கட்டுப்படுத்தலாம் என, மீஞ்சூர் வேளாண் துறை உதவி இயக்குனர் ரேவதி தெரிவித்து உள்ளார். இதுகுறித்து, அவர் கூறுகையில், 'தற்போது நிலவும் மேக மூட்டத்தினாலும், மழையின் காரணமாகவும் நெல் பயிரிடப்பட்டு உள்ள விளை நிலங்களில், மேற்கண்ட நோய்களின் தாக்குதல் உள்ளது. விவசாயிகள் மேற்கண்ட மருந்து ஆலோசனைகளை நடைமுறைபடுத்தி நெற்பயிர்களை பாதுகாக்க வலியுறுத்தி உள்ளோம்' என்றார். பூச்சி தாக்குதலை தடுக்க 2.47 ஏக்கருக்கு...

கார்டேப்ஹைட்ரோ குளோரைடு - 1,000 கிராம்

டைகுளார்வாஸ் - 627 மிலி

பிப்ரோனில் - 62.5 கிராம்

டிரைசோபாஸ் - 12.59 மிலி

குளோர் பைரிபாஸ் - 1.25 லிட்டர்

நோயை கட்டுப்படுத்த 2.47 ஏக்கருக்கு...

கார்பன்டாசிம் - 500 கிராம்

டிரைசைக்ளோகோல் - 500 கிராம்

பிரப்பினோசோனோல் - 500 மிலி

**<u>விவசாயிகள் குறைதீர் கூட்டம்</u>**

திருவள்ளூர்: திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம், வரும் 21ம் தேதி, முற்பகல் 11.00 மணிக்கு, ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது. மாவட்ட ஆட்சியர் வீர ராகவ ராவ் தலைமையில் நடைபெற உள்ள கூட்டத்தில் வேளாண் தோட்டக்கலை, மின்வாரியம், கூட்டுறவு, பொதுப்பணி, வேளாண்மை பொறியியல், மீன்வளம், கால்நடை பராமரிப்பு, வேளாண் விற்பனை மற்றும் வணிக துறை மற்றும் இதர வேளாண் சார்ந்த துறை அலுவலர்கள் கலந்து

கொண்டு, விவசாயிகள் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர். எனவே, இம்மாவட்டத்தைச் சார்ந்த விவசாயிகள், மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டு பயன் பெற வேண்டுமாறு, ஆட்சியர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## நாமகிரிப்பேட்டையில் ரூ.60 லட்சம் மஞ்சள் ஏலம்

ராசிபுரம் : நாமகிரிப்பேட்டை, வேளாண் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று, 60 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் ஏலம் நடந்தது. நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில் மஞ்சள் ஏலம் நடந்தது. நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் சேலம் சுற்று வட்டார பகுதிகளில் உள்ள விவசாயிகள் தங்கள் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.நேற்று, நடந்த ஏலத்தில், 65 கிலோ கொண்ட, 1,049 மூட்டைகள் விற்பனைக்கு வந்தது. விரலி ரகம், குவிண்டாலுக்கு அதிக பட்சம், 8,199, குறைந்த பட்சம், 6,788 ரூபாய்க்கு ஏலம் போனது. உருண்டை ரகம் மஞ்சள், அதிக பட்சம், மூட்டை 6,610க்கும், குறைந்த பட்சம், 5,959 ரூபாய்க்கும் ஏலம்போனது.பனங்காலி ரகம், அதிக பட்சம், 14 ஆயிரத்து, 300க்கும், குறைந்த பட்சம், 8,899 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, நேற்று மட்டும், ஒரே நாளில், 60 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் விற்பனையானது.

## ரூ.8.75 லட்சம் மதிப்பில் வேளாண் பொருட்கள் ஏலம்

அந்தியூர் : அந்தியூர் வேளாண் ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்துக்கு, நேற்று, அத்தாணி, கோபி, பருவாச்சி, எண்ணமங்கலம், புதுப்பாளையம், சங்கராப்பாளையம், கொளத்தூர், சென்னம்பட்டி, பர்கூர் பகுதியில் இருந்து விவசாயிகள் விற்பனைக்காக, தேங்காய், எள், நிலக்கடலை, மக்காச்சோளம் போன்ற விளைபொருட்களை கொண்டு வந்திருந்தனர். இதில், 30 ஆயிரம் தேங்காய், குறைந்த விலையாக, 3.70 ரூபாய்க்கும், அதிகவிலையாக, 12.70 ரூபாய் என, 3 லட்சம் ரூபாய்க்கும், கொப்பரை

தேங்காய், 60 மூட்டைகள், குறைந்த பட்ச விலையாக, 52.15 முதல், 88.18 ரூபாய் வரை, 2 லட்சம் ரூபாய்க்கும், சிவப்பு ரக எள், 15 மூட்டை, கிலோ ஒன்று, 63.69 முதல், 88.49 ரூபாய் என, 60 ஆயிரம் ரூபாய்க்கும், மக்காச்சோளம், 55 மூட்டை, கிலோ ஒன்று, 10.42 முதல், 11.24 ரூபாய் வரை, 55 ஆயிரம் ரூபாய்க்கும் ஏலம் போனது.கடந்த, புதன்கிழமை நடந்த நிலக்கடலை ஏலத்துக்கு, 400 மூட்டைகள் கொண்டு வரப்பட்டிருந்தது. பச்சை கிலோ, ஒன்று, 14.41 முதல், 21 ரூபாய் வரையும், காய்ந்தது, 31.10 முதல், 53 வரை, 2.60 லட்சம் ரூபாய் என மொத்தம், 8.75 லட்சத்துக்கு வேளாண் பொருட்கள் வர்த்தகம் நடந்ததாக, விற்பனைக்கூட கண்காணிப்பாளர் சுப்புராமன் தெரிவித்தார்.

## நீலகிரியில் பயிர் கடனாக 306 கோடி ரூபாய்

ஊட்டி : "நீலகிரி மாவட்ட கூட்டுறவு துறை சார்பில், 306 கோடி ரூபாய் பயிர் கடன் வழங்கப்பட்டுள்ளது' என, தெரிவிக்கப்பட்டது. நீலகிரி மாவட்டத்தில், 61வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா நிகழ்ச்சி, சீனிவாச பெருமாள் திருமண மண்டபத்தில் நேற்று நடந்தது. நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் பெள்ளி, கூட்டுறவு கொடியேற்றினார். நீலகிரி மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப் பதிவாளர் முருகன் வரவேற்றார்.மாவட்ட கலெக்டர் சங்கர் தலைமை வகித்து பேசுகையில், ""மாநிலத்தில், மக்களின் பங்களிப்புடன் இயங்கும் பல்வேறு கூட்டுறவு நிறுவனங்கள் சிறப்பான முறையில் செயலாற்றி வருகின்றன. நீலகிரி மாவட்டத்தில், 143 கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. கடந்த 4 ஆண்டுகளில், பயிர் கடனாக 306.7 கோடி ரூபாய், 70 ஆயிரத்து 151 பேருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதில், குறிப்பிட்ட தவணைக்குள் கடன் தொகையை திரும்பி செலுத்துவோருக்கு 7 சதவீத வட்டி தள்ளுபடி என்ற சலுகையின் அடிப்படையில், 14.9 கோடி ரூபாய் வட்டி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. தவிர, 1249 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு கடன்

வழங்கப்பட்டுள்ளது. நகைக் கடனாக 3.50 லட்சம் பேருக்கு, 911 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது," என்றார். நிகழ்ச்சியில், ராஜ்ய சபா எம்.பி., அர்ஜூனன், எம்.பி., கோபாலகிருஷ்ணன், ஆவின் தலைவர் மில்லர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்க தலைவர் கண்ணபிரான், மாவட்ட ஊராட்சி தலைவி மேனகா, ஊட்டி ஊராட்சி ஒன்றிய தலைவி சாந்தி, ஊட்டி நகராட்சி தலைவி சத்தியபாமா ஆகியோர் பேசினர்.பின், 5.50 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட மற்றும் கடன் உதவிகள், பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது. மாவட்ட அளவிலான சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்கு கேடயம், பரிசுகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில், நீலகிரி கூட்டுறவு நிறுவன தலைவர் வினோத், நீலகிரி மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக தலைவர் ராஜகோபால், மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் பலராமன் உட்பட பலர் பங்கேற்றனர். கூட்டுறவு துறை சரக துணைப் பதிவாளர் வாசுதேவன் நன்றி கூறினார். சிறந்த சேவைகளுக்கு அங்கீகாரம் : கூட்டுறவு வார விழாவில், 95 ஆண்டு பழமை வாய்ந்த, ஊட்டி நகர கூட்டுறவு வங்கிக்கு, சிறந்த சேவைக்கான விருது வழங்கப்பட்டது.மேலும், நீலகிரி கூட்டுறவு விற்பனை சங்கத்துக்கு, சிறந்து கூட்டுறவு விற்பனை சங்கம்; கக்குச்சி கூட்டுறவு விற்பனை சங்கம், நீலகிரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் மஞ்சூர் கிளை, குன்னூர் நகர கூட்டுறவு வங்கி, குன்னூர் தோட்ட தொழிலாளர் கூட்டுறவு கடன் சங்கம், எல்லநள்ளி ஊசி தொழிற்சாலை பணியாளர்கள் கடன் சங்கம், எருமாடு தொடக்க வேளாண்மை கடன் சங்கம், கோத்தகிரி, காவல்துறை கூட்டுறவு பண்டகம் ஆகியவற்றுக்கும் விருது வழங்கப்பட்டது. தொடர்ந்து, ஊட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி, மசினகுடி கேம்ப் கூட்டுறவு சங்கம், கூட்டுறவு அச்சகம், நீலகிரி மாவட்ட கூட்டுறவு ஒன்றியம், நீலகிரி மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகம், நீலகிரி கூட்டுறவு நிறுவனம்,

நெலாக்கோட்டை, தேவர்சோலை, கூடலூர் பால் கூட்டுறவு சங்கம், ஊட்டி கட்டட சங்கம், மஞ்சூர் இன்கோ தொழிற்சாலை, கோத்தகிரி, கூடலூர் பால் கூட்டுறவு சங்கம், கூடலூர், ஈதேஸ்வரா தொடக்க வேளாண்மை கடன் சங்கம், சேரம்பாடி ரேஷன் கடை ஆகியவையும் விருதுகளை பெற்றன.

## நாளை வாழை திருவிழா துவக்கம்: கூட்டமைப்பு தலைவர் தகவல்

திருச்சி : ""திருச்சியில் வரும், 20, 21ம் தேதிகளில் வாழை திருவிழா நடக்கிறது'' என, தமிழ்நாடு வாழை விவசாயிகள் கூட்டமைப்பு தலைவர் கருப்பையா தெரிவித்தார். திருச்சியில், அவர் நிருபர்களிடம் கூறியதாவது: இந்திய தொழில் கூட்டமைப்பு சார்பில், மூன்றாவது வாழை திருவிழா, வரும், 20, 21ம் தேதிகளில், திருச்சியில் நடக்கிறது. இதில், அறுவடைக்கு பிந்தைய மேலாண்மை மற்றும் வாழையில் மதிப்பு கூட்டுதல் பற்றி கருத்தரங்கமும், இரண்டு நாள் கண்காட்சியும் நடக்கிறது.வாழை திருவிழாவில், முன்னோடி நிறுவனங்களான ப்ளூ ஸ்டார், டான்போஸ், பேயர், டபே, ஜெயின் இரிகேஷன், கேரள், ரைனக் ஆகியவை பங்கு பெறுகிறது. திருவிழாவில், தமிழ்நாடு விவசாயத்துறை அமைச்சர் அக்ரி கிருஷ்ணமூர்த்தி, வேளாண்மை துறை செயலாளர் ராஜேஷ் லகோனி, தமிழ்நாடு வேளாண் பல்கலை துணை வேந்தர் ராமசாமி, தேசிய வாழை ஆராய்ச்சி மைய இயக்குநர் முஸ்தபா, திருச்சி மாவட்ட கலெக்டர் ஜெயஸ்ரீ உள்பட பலர் பங்கேற்கின்றனர்.இந்த திருவிழாவில், தமிழ்நாடு வாழை உற்பத்தியாளர்கள் கம்பெனி லிட் துவக்கமும், வேளாண் கட்டமைப்பு வசதிகள் குறித்த ஆய்வு அறிக்கையை, அரசுக்கு சமர்ப்பித்தலும் நடக்கிறது. திருவிழாவில் முன்னணி நிறுவனங்களை சேர்ந்த, 70 காட்சி அரங்குகளும் இடம் பெறுகிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.அப்போது, சென்னை சி.ஐ.ஐ., இயக்குனர் ஸ்ரீதர், கூட்டமைப்பு புரவலர் சுகுமார், பொதுச்செயலாளர்

அஜித்தன், பொருளாளர் சுப்பிர மணியன், காவிரி டெல்டா மூத்த உறுப்பினர் காந்தி பித்தன் ஆகியோர் உடனிருந்தனர்.

**3 டன் யூரியா இருப்பு வைக்கஉத்தரவு: தரக்கட்டுபாட்டுத்துறை அதிரடி**

திண்டுக்கல்:"" பயிர் பாதுகாப்பிற்கு அனைத்து தொடக்க வேளாண்மை மற்றும் தனியார் உரக்கடைகளில் 3 டன் யூரியா உரம் கையிருப்பு வைக்க வேண்டும்" என வேளாண் தரக்கட்டுப்பாட்டுத்துறை உதவி இயக்குனர் ரவிச்சந்திரன் வலியுறுத்தியுள்ளார்.திண்டுக்கல் மாவட்டம் முழுவதும் விவசாயிகள் அதிகளவு பயன்படுத்தும் யூரியா உரம் கடந்த சில வாரங்களாக பற்றாக்குறை நிலவியது. இதை சரிசெய்வதற்கு வேளாண் மற்றும் தரக்கட்டுப்பாட்டு துறைகள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. தற்போதுதனியார் உர உற்பத்தி நிறுவனங்களான, ""மெட்ராஸ் பெர்ட்டிலைஷர் லிமிடெட் மற்றும் ஸ்பிக் உர நிறுவனம், மங்களூர் கெமிக்கல் பெர்ட்டிலைஷர்" ஆகியவை தினசரி 4700 டன் யூரியா உற்பத்தி துவங்கியுள்ளது. இதனால் தமிழகத்தில் அனைத்து பகுதிகளிலும் நிலவும், யூரியா பற்றாக்குறை பெருமளவில் குறைந்துள்ளது. இதனையடுத்து மாவட்டத்திலுள்ள அனைத்து உர கடைகளிலும், யூரியா உரங்களை 3 டன் அளவிற்கு அந்தந்த கடைகளில் கையிருப்பு வைக்குமாறு உரக்கடை உரிமையாளர்களுக்கும், தொடக்க வேளாண் சங்க அலுவலர்களுக்கும், வேளாண் தரக்கட்டுப்பாட்டுத்துறை வலியுறுத்தியுள்ளது.இதுகுறித்து வேளாண் தரக்கட்டுப்பாட்டுத்துறை உதவி இயக்குனர் ரவிச்சந்திரன் கூறுகையில், ""திண்டுக்கல் மாவட்டத்திற்கு இரண்டாயிரத்து 925 டன் யூரியாவும், 775 டன் டி.ஏ.பி., பொட்டாசியம் 1508 டன்னும், காம்ப்ளக்ஸ் உரங்கள் 1856 டன்னும் வரவழைக்கப்பட்டு கையிருப்பு வைக்கப்பட்டுள்ளது. 400 தனியார் கடைகளில் 800 டன் அளவிற்கு யூரியா கையிருப்பு வைத்துள்ளோம். கலெக்டர் வெங்கடாசலம் தலைமையில் நடந்த ஆய்வுகூட்டத்திற்கு

பின்பு, தனியார் நிறுவனங்களில் 1200 மெட்ரிக் டன் யூரியா கையிருப்பு வைக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. ஒருவாரத்திற்கு தேவையான அனைத்து உரங்களும் உரக்கடைகளில் இருக்குமாறு சப்ளை செய்யப்பட்டு வருகிறது. மேலும் ஆயிரத்து 400 மெ., டன் யூரியா உரங்கள், 197 தொடக்க வேளாண்மை சங்கங்களிலும், தனியார் நிறுவனங்களில் 1579 மெ., டன் யூரியாவும் கையிருப்பு வைக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் அந்தந்த பகுதிகளிலுள்ள உரக்கடைகளில் உரங் களை வாங்கி பயனடையலாம்." என்றார்.

## கறவை மாடுகள்வழங்கும் விழா

வேடசந்தூர்:ராமநாதபுரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் சார்பில், சுற்றுப்பகுதியை சேர்ந்த 21 பயனாளிகளுக்கு, ரூ.7 லட்சத்து 22 ஆயிரம் மதிப்பிலான, கறவை மாடுகள் வழங்கப்பட்டன. விழாவிற்கு வேடசந்தூர் ஒன்றிய தலைவர் சுப்பிரமணி தலைமை வகித்தார். கூட்டுறவு சங்க தலைவர் மோகன்தாஸ் முன்னிலை வகித்தார். பழனிச்சாமி எம்.எல்.ஏ., உட்பட பலர் பங்கேற்றனர். கூட்டுறவு சங்க துணை தலைவர் கணேசன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## அடர் தீவன பயிற்சி

தாண்டிக்குடி:தாண்டிக்குடியில் கால்நடை வளர்க்கும் விவசாயிகளுக்கு ஆத்மா திட்டத்தின் கீழ் அடர் தீவனம் தயாரிக்கும் பயிற்சி நடந்தது. கொடைக்கானல் வட்டார ஆத்மா திட்ட தலைவர் ரவிச்சந்திரன் தலை மை வகித்தார். தாண்டிக்குடி கால்நடை டாக்டர் அருண் விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கினார். உளுந்தம் பொட்டு, சோளம் மாவு, புண்ணாக்கு, தவிடு, உப்பு, மல்டி விட்டமின் ஆகியவற்றை விகிதாசாரப்படி கலப்பதால் கால்நடைகளுக்கு தேவையான புரோட்டீன், கார்போ ஹைட்ரேட் கிடைப்பதோடு தரமான பால் உற்பத்தி பெருக்க முடியும் என பயிற்சியில் விளக்கப்பட்டது.ஆத்மா திட்ட மேலாளர் கார்த்தி, சிறப்பு

அறிஞர் சபரீஸ்வரன், கால்நடை உதவியாளர் ஜெயந்தி, முத்து ஆகியோர் கலந்து கொண்டனர். பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு இலவசமாக அடர் தீவனம் வழங்கப்பட்டது.

**நாட்டுக்கோழி வளர்ப்பு இன்று பயிற்சி முகாம்**

தஞ்சாவூர் : தஞ்சை கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மைய பேராசிரியர் புண்ணியமூர்த்தி வெளியிட்ட அறிக்கை:

தஞ்சையில் உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலையின் கால்நடை மருத்துவ பல்கலை பயிற்சி மையத்தில், இன்று, காலை, 9 மணி முதல் நாட்டுக்கோழி வளர்ப்பு மற்றும் முதலுதவி மூலிகை மருத்துவம் தொடர்பான இலவச பயிற்சி அளிக்கப்படுகிறது.இந்த பயிற்சியில் சேர விரும்புவோர், ஆதார் அட்டை அல்லது புகைப்படத்துடன் கூடிய வேறு அடையாள அட்டையுடன் நேரில் வரவேண்டும்.கூடுதல் தகவல் அறிய, 04362-204009 என்ற எண்ணில் தொடர்பு கொள்ள வேண்டும்.

**மூன்றாண்டுகளுக்கு பின் கரும்பு சாகுபடியில் ஆர்வம்**

தேவதானப்பட்டி:பெரியகுளம் தாலுகா பகுதியில் கடந்த மூன்றாண்டுகளுக்கு பிறகு கரும்பு சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இப்பகுதியில் மஞ்சளாறு அணை, சோத்துப்பாறை அணை, வராகநதி என நீராதாரங்கள் இருப்பதால் நெல், வாழை சாகுபடி நடக்கிறது. இருந்த போதிலும் பணப்பயிராக கருதப்படும் கரும்பு சாகுபடி மூன்றாண்டுகளுக்கு முன்பு வரை அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டது. குறிப்பாக தேவதானப்பட்டி, எருமலைநாயக்கன்பட்டி, அட்டணம்பட்டி, புல்லக்காபட்டி, முருகமலை நகர், காமக்காபட்டி, ஜெயமங்கலம், மேல்மங்கலம், ஆண்டிபட்டி, தேனி பகுதியிலும் கூடுதலான பரப்பளவில் கரும்பு சாகுபடி செய்யப்பட்டது. *வறட்சி: நடவுக்கு தேவையான கரணைகளை விவசாயிகள் தங்கள்

நிலங்களிலேயே உற்பத்தி செய்தனர். உற்பத்தி செய்யப்பட்ட கரும்புகள் வைகை அணை ராஜ்ஸ்ரீ சர்க்கரை ஆலைக்கு அனுப்பி வைக்கப்பட்டன. கடந்த மூன்றாண்டுகளாக ஆண்டிபட்டி, பெரியகுளம், தேனி, போடி, கடமலை-மயிலை ஆகிய ஒன்றியங்களில் வரலாறு காணாத வறட்சி ஏற்பட்டது. நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததால் விவசாயப்பணிகளை விவசாயிகள் தவிர்த்து வந்தனர். பெரியகுளம் ஒன்றியத்தில் அ.வாடிப்பட்டி, கோயில்புரம், மேல்மங்கலம், குள்ளப்புரம், பொம்மிநாயக்கன்பட்டி, தேவதானப்பட்டி உட்பட பல கிராமங்களில் கரும்பு வயல்கள் நீரின்றி காய்ந்தன. இந்நிலையில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்துள்ளது. கண்மாய், குளம், நீர்நிலைகள் அனைத்தும் நிறைந்துள்ளது. இதனால் சில நாட்களாக கரும்பு சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். தற்போது 400க்கும் மேற்பட்ட ஏக்கரில் கரும்பு சாகுபடி செய்யும் பணி நடந்து வருகிறது. ராஜ்ஸ்ரீசர்க்கரை ஆலை அதிகாரி ஒருவர் கூறுகையில், "கடந்த மூன்றாண்டுகளாக தொடர்ந்து சாகுபடி பரப்பளவு குறைந்து வந்தது. நடப்பு பருவத்தில் கரும்பு சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வமாக உள்ளனர். விவசாயிகளை ஊக்கப்படுத்தும் விதமாக கரும்பு விவசாயிகளுக்கு முன்பணம் வழங்கி வருகிறோம்,' என்றார்.

## <u>ராமநாதபுரத்தில் 5 மணி நேரம் மழை</u>

ராமநாதபுரம்:ராமநாதபுரத்தில் நேற்று காலை 9:00 முதல் மதியம் 2:00 மணி வரை இடி, மின்னலுடன் மழை கொட்டித் தீர்த்தது. பகல் முழுவதும் வெளிச்சம் இன்றி மேகமூட்டமாக இருந்தது. சாலைகளில் சென்ற வாகனங்கள் பகலில் முகப்பு விளக்குகளை எரியவிட்டபடி சென்றன. நேற்று காலை 8:00 மணி நிலவரப்படி மாவட்டத்தில் பெய்த மழையளவு (மி.மீட்டரில்): ராமநாதபுரம் 7.1, பாம்பன் 21.6 , தொண்டி 0.6,

பள்ளமோர்குளம் 6, மண்டபம் 22, ராமேஸ்வரம் 8.2, தங்கச்சிமடம் 9, கடலாடி 1.2, வாலிநோக்கம் 1.8 மி.மீ மழை பெய்தது.

## 17 சதவீதம் வரை இழப்பு: எலிகளால் மகசூல்:கூட்டு விவசாயத்திற்கு அதிகாரிகள் யோசனை

காரைக்குடி:வயல்களில் எலிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் 17 சதவீதம் வரை மகசூல் இழப்பு ஏற்படுகிறது. இதை தடுக்க கூட்டு விவசாயம், எலி கிட்டிகளை பயன்படுத்த வேளாண்துறையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.சிவகங்கை மாவட்டத்தில் 80 ஆயிரம் எக்டேரில் நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. விதைப்பு முதல் அறுவடை வரையிலான காலகட்டத்தில் பூச்சி, நோய், வறட்சி, நுண்ணூட்ட சத்து பற்றாக்குறையால் மகசூல் இழப்பு ஏற்படுகிறது. மற்றொரு முக்கிய காரணியான எலி மூலமும் 17 சதவீதம் இழப்பு ஏற்படுகிறது. உலக அளவில் இந்தோனேசியா, தாய்லாந்து, மலேசியா, பிலிப்பைன்ஸ் நாடுகளில் எலிகள் அதிக அளவு சேதத்தை விளைவிக்கின்றன. பயிர்காலம்: எலிகள் ஏற்படுத்தும் பாதிப்பு, மழை காலங்களில் அதிகமாகவும், பயிர் வளர்ச்சியின் அனைத்து நிலைகளிலும், அறுவடை நேரத்தில் மிக அதிகமான சேதாரமும் காணப்படும். நட்டவுடன் நாற்றை எளிதாக பறித்து விடும். வளர்ச்சி பருவத்தில் பக்க கிளைகளை வெட்டி சேதப்படுத்தும். வாழ்க்கை முறை: நெல் வயலில் காணப்படும் எலி பற்கள் கூர்மையான ரம்பம் போன்று காணப்படும். ஒரு எலியின் எடை 11 முதல் 22 கிராம். இரவில் சுறுசுறுப்பாக இயங்கும். கேட்கும் திறன், சுவை, வாசனை, தொடு உணர்ச்சி அதிகம். சாகுபடி இல்லாத காலங்களில் களை செடி, பூச்சி, தவளை, நத்தைகளை உண்டு வாழும். தன் பற்களின் வளர்ச்சியினை கட்டுப்பாட்டுக்குள் வைத்து கொள்ள தொடர்ந்து மின்கம்பி, அலுமினிய தகடு, கண்ணாடி போன்றவற்றில் தேய்த்து பற்களின் வளர்ச்சியை கட்டுப்படுத்தும். ஒரு

ஆண் எலி அனைத்து பெண் எலிகளுடனும் இணையும். 6 மாதம் முதல் ஒரு ஆண்டு வரை உயிர் வாழும். ஒரு பெண் எலி ஆண்டுக்கு மூன்று முதல் நான்கு முறை கருத்தரித்து, 6 முதல் 10 குட்டிகள் வரை ஈனும். ஒரு ஜோடி எலி தன் குட்டிகளுடன் சேர்ந்து ஆண்டுக்கு 500 குட்டிகள் வரையில் இனப்பெருக்கம் செய்யும். இன பெருக்கம் அதிகமாக இருப்பதால் இவற்றை கட்டுப்படுத்துவது கடினம். பழக்க வழக்கம்: கூட்டமாக சேர்ந்து வாழும். இரவு முழுவதும் பூச்சி, கரையான், வெட்டுக்கிளி, நத்தை, விதை, அரிசி, காய்கறி, பழங்களை உட்கொள்ளும். பகல் நேரங்களில் அறுவடைக்கு தயாரான வயல், களை செடிக ளுக்கு இடையில் பயிர் இல்லாத காலங்களில் பாறை இடுக்குகளிலும் மறைந்து வாழும் தன்மை கொண்டது. கட்டுப்பாட்டு முறை: 17 சதவீத மகசூல் பாதிப்பை ஏற்படும் எலிகளை கட்டுப்படுத்த வரப்பில் எலி வலைகள் இல்லாதவாறு சேறு கொண்டு மெழுகி தயார் செய்யலாம். கிராமம் முழுவதும் ஒரே நேரத்தில் விதைப்பு செய்வதால் சேதத்தை தவிர்க்கலாம். எலி வளைகளை கண்டறிந்து செல்பாஸ் மாத்திரை வலைக்கு 2 வீதம் இட்டு, ஈர களிமண் கொண்டு இறுக்கமாக மூடி கட்டுப்படுத்தலாம். வரப்புகளில் அரிசி குருணை, தாவர எண்ணெய்யுடன் சிங் பாஸ்பைட் கலந்து வைத்து கட்டுப்படுத்தலாம். தஞ்சாவூர் எலி கிட்டிகளை ஏக்கருக்கு 15 என்ற அளவில் வரப்பில் இருந்து 3 மீட்டர் தள்ளி வயலில் வைத்து எலிகளை கட்டுப்படுத்தி, மகசூல் இழப்பை தவிர்த்திடலாம் என கல்லல் வேளாண் உதவி இயக்குனர் கணேசன் கேட்டு கொண்டுள்ளார்.

இன்றைய வேளாண் செய்திகள்

**திருவாரூர் மாவட்டத்தில் 1.49 லட்சம் ஏக்கரில் சம்பா நெல் சாகுபடி கூட்டுறவு வாரவிழாவில் தகவல்**

வலங்கைமான்,: திருவாரூர் மாவட்டத்தில் 1.49 லட்சம் ஏக்கரில் சம்பா சாகுபடி செய்யப்பட்டுள்ளதாக வலங்கைமானில் நடைபெற்ற கூட்டுறவு வாரவிழாவில் அமைச்சர் தெரிவித்தார். வலங்கைமானில் 61வது அனைத்திந்திய கூட்டுறவு வார விழா நடைபெற்றது. கலெக்டர் மதிவாணன் தலைமை வகித்தார். நாகை தொகுதி எம்பி, கோபால் இணைப்பதிவாளர் ரவிச்சந்திரன், வேளாண் இணை இயக்குநர் மயில்வாகனன் முன்னிலை வகித்தனர். விழாவில் மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு கடன் வசதி மற்றும் சிறப்பாக செயல்பட்ட கூட்டுறவு சங்கங்களுக்கு சுழல் கேடயமும் வழங்கப்பட்டது. விழாவில் உணவுத்துறை அமைச்சர் காமராஜ் பேசுகையில்; 2013-14 நிதியாண்டில் 43 ஆயிரத்து 172 விவசாயிகளுக்கு 140 கோடியே 55 லட்சம் பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2014-15ம் நிதியாண்டில் விவசாயிகளுக்கு வட்டியில்லா பயிர்க்கடனாக ரூ.150 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 28 ஆயிரத்து 534 விவசாயிகளுக்கு ரூ.99 கோடியே 61 லட்சம் பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. திருவாரூர் மாவட்டத்தில் விவசாயிகளின் உரத் தேவை பெரும் பாலும் கூட்டுறவு சங்கங்கள் மூலமே நிறைவேற்றப்பட்டு வருகிறது. இதுவரை 28 ஆயிரத்து 914 மெட்ரிக் டன் அளவு உரம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. 1 லட்சத்து 49 ஆயி ரம் ஹெக்டேரில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு தட்டுப்பாடின்றி யூரியா வழங்க அனைத்து

நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வெளிமாநிலங்களிலிருந்து உதிரியாக கொண்டு வரப்பட்ட யூரியாவை விசாகப்பட்டினம் துறைமுகத்தில் சாக் கில் அடைக்கப்பட்டு பின் னர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. விசாகபட்டினம் பகுதியில் ஏற் பட்ட புயலால் யூரியா டெல் டா மாவட்டங்களில் விநி யோகம் செய்வதில் தேக்கம் ஏற்பட்டுள்ளது. திருவாரூர் மாவட்டத்தில் உள்ள 695 பொது விநியோக திட்ட கடைகள் மூலம் 3 லட்சத்து 36 ஆயிரத்து 219 குடும்ப அட்டைதாரர்களுக்கு இலவச அரிசி வழங்கப்பட்டு வருகிறது. மேலும் மானிய விலையில் சர்க் கரை, மண்ணெண்ணெய், துவரம்பருப்பு, உளுத்தம்பருப்பு, பா மாயில் உள்ளிட்டவையும் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு அமைச்சர் காமராஜ் பேசினார். விழாவில் ஒன்றியக் குழுத் தலைவர் பரமேஸ்வரி, பேரூராட்சி தலைவர் ஜெய பால், வலங்கைமான் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க தலைவர் குணசேகரன், வட்டாட்சியர் ராஜன்பாபு உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியை முன்னிட்டு பள்ளி மாணவ, மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள்நடைபெற்றது.

**<u>மானாவாரி நெல்சாகுபடியில் வளம் காண விஞ்ஞானிகள் ஆலோசனை</u>**

காரைக்குடி, : மானாவாரி நெல் சாகுபடியில் வளம் காண செட்டிநாடு மானாவாரி வேளாண்மை ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் ஆலோசனை தெரிவித்துள்ளனர். காரைக்குடி செட்டிநாடு மானாவாரி வேளாண்மை ஆராய்ச்சி நிலைய தலைவர் சுவாமிநாதன், உதவி பேராசிரியர்கள் கண்ணன், பரமசிவன், கதிர்வேலன் ஆகியோர் விவசாயிகளுக்கு ஆலோசனை தெரிவித்துள்ளனர். இது குறித்து அவர்கள் கூறுகையில், நேரடி மானாவாரி மற்றும் நேரடி இறவை நெல்பயிருக்கு சம்பா மற்றும் பின் சம்பா பருவங்கள் மிகவும் ஏற்றதாகும். நேரடி மானாவாரிக்கு மத்திய வயதுடைய ரகங்களை ஏ.டி.டீ 38, 39, 49 மற்றும் குறைந்த வயதுடைய அண்ணா 4, மதுரை 5, ஏ.டி.டீ 36 மற்றும் ஏ.டி.டீ 43

ரகங்கள் ஏற்றதாகும். ஆனால் மழை பெய்யும் காலம் மற்றும் விதைக்கும் தருணத்தை பொறுத்து உகந்த ரகங்களை தேர்வு செய்ய வேண்டும். நேரடி விதைப்பு இறவைக்கு மத்திய வயதுடைய ரகங்களை கோ (ஆர்) 51, ஏ.டி.டீ 39, 46, 49 மற்றும் குறைந்த வயதுடைய ரகமான கோ 47, ஏ.டி.டீ 45 போன்ற ரகங்களை தேர்வு செய்ய வேண்டும். ஒரு ஏக்கருக்கு 30 கிலோ விதை தேவைப்படும். விதைப்பதற்கு முன் விதை நேர்த்தி மற்றும் விதை கடினப்படுத்துவது மிகவும் அவசியம். விதையை கடினப்படுத்துவதற்கு 1 சதவீதம் பொட்டாஷ் கரைசலை பயன்படுத்த வேண்டும். அதாவது 1 கிலோ விதைக்கு 1 லிட்டர் தண்ணீர் என்ற வீதத்தில் 16 மணி நேரம் விதையை கடினப்படுத்தி நிழலில் உலர வைக்க வேண்டும். பின்னர் விதைக்கும் முன் 3 பாக்கெட் அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியம் மற்றும் ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் சூடோமோனஸை விதையுடன் நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். நேரடி மானாவாரி மற்றும் நேரடி விதைப்பு இறவை நெல்பயிரிகள் பெரும்பாலும் கை விதைப்பே செய்கின்றனர். இவ்வாறு செய்வதால் விதை அளவு அதிகமாக தேவைப்படுவதுடன் பயிர் எண்ணிக்கை மற்றும் இடைவெளி பராமரிக்க முடியாமல் போய் விடுகிறது. ஆகவே டிராக்டர் மூலம் இயக்கப்படும் விதைப்புக் கருவி பயன்படுத்துவது நல்ல பலனை தரும். விதைப்பு கருவி கொண்டு விதைப்பதால் பயிர்களுக்கான சரியான இடைவெளி மற்றும் பயிர் எண்ணிக்கை சரியாக பராமரிக்க முடியும் மற்றும் களை நிர்வாகம் செய்ய ஏதுவாக இருக்கும். மேலும் விதைக் கருவி பயன்படுத்தினால் ஏக்கருக்கு 10 கிலோ விதை அளவை குறைக்கலாம். முக்கியமாக நேரடி விதைப்பு இறவை பயிரில் விதைப்புக் கருவி பயன்படுத்தும் போது சரியான அளவு மழை பெய்தால் செம்மை நெல் சாகுபடி முறைக்கு எளிதாக இருக்கும். மண் ஆய்வு செய்து அதற்கேற்ப உரமிட வேண்டும். மண் ஆய்வு செய்யாத தருணத்தில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து நிர்வாகத்தை கடைப்பிடிக்க வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

## 21ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திண்டுக்கல், : திண்டுக்கல் கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 21ம் தேதி காலை 10 மணிக்கு நடைபெற உள்ளது. இதில் கடந்த மாதம் நடைபெற்ற கூட்டத்தில் அளிக்கப்பட்ட கோரிக்கை மனுக்கள் குறித்து விவாதம் நடைபெறும். கூட்டத்தில் விவசாயம் உள்ளிட்ட பல்வேறு துறை உயர் அலுவலர்களும் கலந்துகொள்ள உள்ளதால் விவசாயிகள் தவறாமல் கலந்துகொண்டு பிரச்னைகளுக்கு தீர்வு காணுமாறு மாவட்ட நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது

## செட்டிக்குளம் வளாகத்தில் 12 டன் வெங்காயம் ரூ.2 லட்சத்திற்கு ஏலம்

பெரம்பலூர்,: செட்டிக்குளம் வெங்காய வணிகவளாகத்தில் 12 டன் சின்ன வெங்காயம ரூ.2 லட்சத்திற்கு ஏலம் எடுக்கப்பட்டது என கலெக்டர் தரேஸ்அகமது தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தெரிவித்திருப்பதாவது:

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் தாலுகா, செட்டிக்குளத்திலுள்ள வெங்காய வணிக வளாகத்தில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலம் சின்ன வெங்காயத்திற்கான திறந்த முறை ஏலம் நடைபெற்றது. இதில், இரூர், நாரண மங்கலம், மேட்டுப்பாளையம், எசனை, சிறுவயலூர், சத்திரமனை, பொம்மனப்பாடி, நாட்டார்மங்க லம், மருதடி, வடக்குமாதவி, சிறுவாச்சூர், செட்டிக்குளம் மாவலிங்கை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 64 விவசாயிகள் தங்களது சின்ன வெங்காயத் தினை கொண்டுவந்து விற்பனை செய்தனர். அரியலூர், செட்டிக்குளம், மங்கூன், சத்திரமனை, பொம்மனப்பாடி, பாடாலூர், திண்டுக்கல், திருநெல்வேலி ஆகியப் பகுதிகளைச் சேர்ந்த 12 வியாபாரிகள் 259 மூட்டை, அதாவது 11,823 கிலோ சின்ன வெங்காயத்தினை ஏலத்தில் எடுத்தனர். புதிய வெங்காயம் அதிகப்பட்சமாக கிலோ ரூ.32.50க்கும் சராசரியாக ஒரு கிலோ ரூ.18க்கும் விற்பனை செய்யப்பட்டது. இதன்

மூலம் ரூ.2,08,494க்கு விற்பனை நடைபெற்றது. செட்டிக்குளம் வெங்காய வணிகவளாகத்தில் வாரந்தோறும் செவ்வாய், வியாழன் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஏலம் நடைபெறும். எனவே விவசாயிகள் தங்களது வெங்காய விளைபொருளை இன்று நேரில் கொண்டுவந்து திறந்தமுறை ஏலத்தின் மூலம் விற்பனை செய்து பயனடையலாம் எனத்தெரிவித்துள்ளார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**141.30 அடி நிரம்பிய நிலையில் முல்லைப்பெரியாறு அணை ஓரிரு நாட்களில் 142 அடியை எட்டும் பொதுப்பணித்துறை அதிகாரிகள் தகவல்**



சென்னை, முல்லைப்பெரியாறு அணை 141.30 அடி நிரம்பியுள்ள நிலையில், தற்போது அப்பகுதியில் மழை குறைந்ததால், 142 அடியை எட்ட ஓரிரு நாட்கள் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறினர். இதுகுறித்து பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறியதாவது:–

முல்லைப்பெரியாறு அணை

தமிழகத்தில் உள்ள மேட்டூர், பவானிசாகர், பாபநாசம், மணிமுத்தாறு உள்ளிட்ட முக்கிய அணைகளில் ஒன்று முல்லைப்பெரியாறு. முல்லையாறு மற்றும் பெரியாறு இரண்டு ஆறுகள் சேரும் இடத்தின் கீழ் அமைந்துள்ளதால் இரு ஆறுகளின் பெயர்களையும் இணைத்து, முல்லைப்பெரியாறு அணை என்று அழைக்கப்படுகிறது. இந்த அணை மூலம் தமிழ்நாட்டில் உள்ள தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை

மற்றும் ராமநாதபுரம் உள்ளிட்ட 5 மாவட்டங்களில் உள்ள 2 லட்சத்து 8 ஆயிரத்து 144 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன. தேனி மாவட்டத்தில் உள்ள கூடலூர், கம்பம், சின்னமனூர் மற்றும் தேனி–அல்லிநகரம் ஆகிய 4 நகராட்சிகளுக்கும், இந்த ஆற்றை ஒட்டியுள்ள பகுதிகளிலிருக்கும் பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளின் குடிநீர்த்தேவையையும் நிறைவேற்றி வருகிறோம். இதுதவிர மதுரை மாநகராட்சியின் குடிநீர்த் தேவையையும், உசிலம்பட்டி மற்றும் சேடப்பட்டி ஒன்றிய பகுதிகளிலுள்ள கிராமங்களுக்கான தனி குடிநீர்திட்டம் மூலம் இப்பகுதிகளின் குடிநீர் தேவையும் நிறைவேற்றப்பட்டு வருகிறது.

ஆய்வு குழு

இந்த நிலையில் முல்லைப்பெரியாறு அணை பாதுகாப்பு இல்லை என்ற அச்சத்தில் கேரள அரசியல் கட்சிகளும், பாதுகாப்பாகவும், பலமாகவும் இருக்கிறது என்கிற நிலையில் தமிழக அரசியல் கட்சிகளும் உள்ளன. இது குறித்து கேரளவில் பல்வேறு போராட்டங்களும் நடந்துவந்தன. இந்த நிலையில் முல்லை பெரியாறு அணையின் பலம் குறித்து ஆய்வு செய்ய கடந்த 2010–ம் ஆண்டு சுப்ரீம் கோர்ட்டு முன்னாள் தலைமை நீதிபதி ஏ.எஸ்.ஆனந்த் தலைமையில், மத்திய அரசின் நீர்வளத்துறை அமைச்சகத்தின் முன்னாள் செயலாளர் சி.டி.தட்டே, இந்திய அரசின் நீர் ஆணையத்தின் முன்னாள் தலைமைப் பொறியாளர் பி.கே.மோஹதா, தமிழ்நாடு அரசின் பிரதிநிதியாக உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதி ஏ.ஆர்.லட்சுமணன், கேரள அரசின் பிரதிநிதியாக சுப்ரீம் கோர்ட்டு முன்னாள் நீதிபதி கே.டி.தாமஸ் ஆகியோரை உறுப்பினராக கொண்ட 5 பேர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது.

142 அடி தண்ணீர்

இக்குழு அணையை ஆய்வு செய்து 2012–ம் ஆண்டு ஏப்ரல் 25–ந் தேதி அளித்த தனது அறிக்கையில், முல்லைப்பெரியாறு அணை பாதுகாப்பாக இருப்பதாக கூறி உள்ளது. அதன்படி தற்போது பெய்து வரும் மழையால்

முல்லை பெரியாறு அணையில் 142 அடி தண்ணீர் நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இருந்தாலும் கடந்த 2006–ம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் 136 அடிக்கு மேல் நீர்தேக்க கேரள அரசு அனுமதி மறுத்ததால் அப்போது 4.2 டி.எம்.சி. தண்ணீர் வீணாக கடலில் கலந்தது.

<u>பாதுகாப்பு அதிகரிப்பு</u>

இந்த நிலையில் 'வெண்ணை திரண்டு வரும் போது தாழியை உடைத்த' கதையாக, முல்லைப்பெரியாறு அணையில் தண்ணீர் நிரப்புவது தொடர்பாக, கேரள மாநில அரசியல் கட்சியினர் சிலர் குழப்பத்தை ஏற்படுத்தி வருகின்றனர். அணைக்குள் தேவையில்லாதவர்கள் நுழைவதை தடுப்பதற்காக மத்திய தொழில் பாதுகாப்பு படையினரை பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்த வேண்டும் என்று கோரி தமிழக அரசின் பார்வைக்கும் கொண்டு சென்றுள்ளோம். இருந்தாலும், கடந்த வாரம் அணை நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழையால் நேற்றைய நிலவரப்படி 141.30 அடி தண்ணீர் நிரம்பியுள்ளது. இந்த நிலையில் தற்போது மழை அளவு குறைந்துள்ளதால், 142 அடியை எட்ட இன்னும் ஓரிரு நாட்கள் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.

## <u>அதிக எடையின் காரணமாக முட்டை ஓட்டின் தரம் குறைய வாய்ப்பு உள்ளது ஆராய்ச்சி நிலையம் தகவல்</u>

நாமக்கல் மாவட்டத்தில் இன்று (புதன்கிழமை) முதல் அடுத்த 3 நாட்களுக்கு நிலவும் வானிலை குறித்து நாமக்கல் கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் வெளியிடப்பட்டு உள்ள அறிக்கையில் கூறப்பட்டு உள்ளதாவது:- இன்று முதல் அடுத்த 3 நாட்கள் வானம் பொதுவாக மேக மூட்டத்துடன் காணப்படும். இன்று முதல் அடுத்த 3 நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்பு இல்லை. காற்றின் வேகம் இன்று முதல் அடுத்த 3 நாட்களுக்கு முறையே 3, 2, 2 கி.மீ. வேகத்தில்

இருக்கும். கிழக்கு திசையில் இருந்து வீசும். வெப்ப நிலையை பொறுத்த வரையில் அதிகபட்சமாக 89.6 டிகிரியாகவும், குறைந்தபட்சமாக 69.8 டிகிரியாகவும் இருக்கும். காற்றின் ஈரப்பதம் அதிகபட்சமாக முறையே 85, 85, 85 சதவீதமாகவும், குறைந்தபட்சமாக முறையே 70, 70, 71 சதவீதமாகவும் இருக்கும். தமிழகத்தின் தென்கிழக்கு திசையில் காணப்படும் குறைந்த அழுத்த காற்று மண்டலத்தால் வடமேற்கு மாவட்டங்களில் மேகமூட்டம் காணப்பட்டு, பகல் மற்றும் இரவு வெப்ப அளவுகள் குறைந்தே காணப்படும். இதன் காரணமாக தீவன எடுப்பு கோழிகளிடையே உயர்ந்து காணப்படும். வயதான கோழிகளில் முட்டையின் எடை கூட வாய்ப்பு உள்ளது. எனவே அதிக எடையின் காரணமாக முட்டை ஓட்டின் தரம் குறைய வாய்ப்பு உள்ளது. புரதத்தை குறைப்பதுடன் முட்டை ஓட்டின் தரத்தை உயர்த்த வைட்டமின் டி-3 -யை தீவனத்தில் குறைந்த அளவிலாவது சேர்த்து வரவேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

## <u>பாலக்கோடு மார்க்கெட்டில் தக்காளி விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி ஒரு கூடை ரூ.170-க்கு விற்பனை</u>



பாலக்கோடு மார்க்கெட் டில் தக்காளி விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள் ளனர். ஒரு கூடை ரூ.170-க்கு விற்பனை செய்யப் படுகிறது.

விளைச்சல்அதிகரிப்பு

தர்மபுரி மாவட்டம் பாலக் கோடு, மாரண்டஅள்ளி, பஞ்சப்பள்ளி மற்றும் காரிமங்கலம், பாப்பாரப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் அதிக அளவில்

தக்காளி பயிரிடப்பட்டுள்ளது. ஒரு நாளைக்கு பாலக்கோடு மார்க்கெட்டுக்கு 10 டன் முதல் 15 டன் வரை தக்காளி விற் பனைக்காக வருகிறது. இங் கிருந்து தர்மபுரி மட்டு மல்ல தமிழகத்தின் பல்வேறு மாவட் டங்களுக்கு தக்காளி ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. இந்தாண்டு பாலக்கோடு, மாரண்டஅள்ளி, பஞ்சப் பள்ளி உள்ளிட்ட பகுதிகளில் பரவலாக கனமழை பெய்த தால் தக்காளி விளைச்சல் அமோகமாக உள்ளது. இந்த தக்காளிகள் தற்போது அறுவடை செய்யப்படுகிறது. கடந்த சில நாட்களாக ஒரு கூடை தக்காளி ரூ. 130 முதல் ரூ.150 வரை விலை போனது. சில்லரையாக ஒரு கிலோ ரூ.10-க்கு விற்பனை செய்யப் பட்டது. இவற்றை வியாபாரி கள் வாங்கி அட் டைப்பெட்டி களில் அடுக்கி தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. விவசாயிகள் மகிழ்ச்சி இந்தநிலையில் நேற்று பாலக்கோடு தக்காளி மார்க் கெட்டில் 17 கிலோ எடையுள்ள ஒரு கூடை தக்காளி ரூ.170-க்கு விற்பனையானது. இதே போன்று 25 கிலோ எடை கொண்ட ஒரு கிரேடு தக்காளி ரூ.250-க்கு விற்பனை செய்யப் பட்டது. விவசாயிகளிடம் இருந்து வியாபாரிகள் தக் காளியை ஆர்வத்துடன் வாங் கினர். இதனால் நேற்று பாலக் கோடு மார்க் கெட்டில் தக் காளி விற்பனை படுஜோராக நடைபெற்றது. குறிப்பாக வெளியூரை சேர்ந்த வியா பாரிகள் போட்டி போட்டு தக்காளியை வாங்கினர். மார்க்கெட்டில் தக்காளி விலை அதிகரித்து ஒரு கூடை ரூ.170 வரை விற்பனை செய்யப் பட்டதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

## பெரம்பலூர் மாவட்டத்தில் காய்கறி தொகுப்பு மேம்பாட்டு திட்டத்தை செயல்படுத்த ரூ.1½ கோடி நிதி ஒதுக்கீடு கலெக்டர் தகவல்

பெரம்பலூர் மாவட் டத்தில் காய்கறி தொகுப்பு மேம்பாட்டு திட்டத்தை செயல்படுத்த ரூ.1 கோடியே 51 லட்சத்து 10 ஆயிரம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளதாக கலெக்டர் தரேஸ் அஹமது தெரிவித் துள்ளார்.

கலெக்டர் ஆய்வு பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை வட்டா ரத்தில் பெருநகர காய்கறி தொகுப்பு வளர்ச்சி திட்டத் தில் தேர்வு செய்யப்பட்ட விவசாயிகளின் வயல்களை கலெக்டர் தரேஷ் அஹமது பார்வையிட்டார். அன்ன மங்கலத்தை சேர்ந்த விவசாயி ஜோசப் வயலில் சாகுபடி செய்யப் பட்டுள்ள வீரிய ரக கத்தரி, வீரிய ரக தக்காளி மற்றும் உயர் விளைச்சல் தரக்கூடிய செடி அவரை வயல்களையும், வீரிய ரக வெண்டை மற்றும் வேப்பந் தட்டை கணேசன் என்பவ ரது வயலில் சாகுபடி செய்யப் பட்டுள்ள உயர் விளைச்சல் தரக்கூடிய முருங் கை வயலையும் மாவட்ட கலெக்டர் தரேஸ் அஹமது நேரில் பார்வை யிட்டு ஆய்வு செய்தார். பின்னர் அவர் கூறியதாவது:– ரூ.1 கோடியே 51 லட்சம் பெரம்பலூர் மாவட் டத்தில் தோட்டக்கலைத் துறை மூலம் தேசிய தோட்டக்கலை இயக்கம், தேசிய வேளாண்மை வளர்ச் சித் திட்டம், மானா வாரி பகுதி அபிவிருத்தித் திட்டம், தேசிய மூலிகைப் பயிர்கள் இயக்கம் மற்றும் தேசிய நுண்ணீர் பாசன இயக்கம் ஆகிய திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டில் காய்கறி சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்தியை அதிகரித் திடவும், விவசாயிகளின் வருமானத்தை பெருக்கி டவும், பெருநகர காய்கறி தொகுப்பு மேம் பாட்டுத் திட்டம் செயல்படுத் திட ரூ.1 கோடியே 51 லட்சத்து 10 ஆயிரம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. மானியம்
இதில் 200 எக்டரில் வீரிய ரக காய்கறி சாகுபடி செய்ய எக்டருக்கு ரூ.33,750–ம், 60 எக்டரில் உயர் விளைச்சல் ரக காய்கறிகள் சாகுபடி செய்ய ஒரு எக்டருக்கு ரூ.22,500–ம் மானியமாக வழங்கப்பட வுள்ளது. இத்திட்டத்தில் ஆலத்தூர் வட்டாரத்தில் 320 விவசா யிகள் 16 குழுக்களாகவும், பெரம்பலூர் வட்டாரத்தில் 320 விவசாயிகள் 16 குழுக் களாகவும், வேப்பந்தட்டை வட்டாரத்தில் 260 விவசா யிகள் 13 குழுக்களாகவும், வேப்பூர் வட்டாரத்தில் 100 விவசாயிகள் 5 குழுக்களாகவும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். மாவட்டத்தில் 50 குழுக்களை 7 குழுமங்களாக ஒருங் கிணைத்து இத்திட்டம் செயல்

படுத்தப்பட உள்ளது. விளைபொருட்கள் சேகரிப்பு மையம் மாவட்டத்தில் இரண்டு இடங்களில் விளைபொருட் கள் சேகரிப்பு மையம் அமைக்கப்பட்டு விவசாயி களின் விளைபொருட்களை இம்மையத்திற்கு கொண்டு வந்து அங்கிருந்து நகர காய்கறி மார்க்கெட்டுக்கு அனுப்பி வைத்து, நல்ல விற்பனை விலை கிடைப்பதற்கு வழி வகை செய்யப்பட உள்ளது. சேகரிப்பு மையத்தில் இருந்து நகர மார்க்கெட்டிற்கு காய்கறிகளை எடுத்து செல்ல 40 சதவீதம் மானியத்தில் போக்குவரத்து வாகனம் வழங்கு வதற்கு வழிவகை செய்யப்பட உள்ளது.

தொழில்நுட்பபயிற்சி

வெங்காயம் சேமித்து வைக்க(25 மெ.டன்) சேமிப்பு அமைப்பு அமைப்பதற்கு எண் ஒன்றுக்கு 50 சதவீதம் மானிய மாக ரூ.50 ஆயிரம் வீதம் 10 எண்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது. காய்கறி விற்பனை அங்காடி 5 எண்கள் அமைக்க நுகர் வோர்களுக்கு குறைந்த விலை யில் காய்கறிகள் கிடைக்கவும், உற்பத்தியாளர்களுக்கு தங்கள் பொருளுக்கு அதிக விலை கிடைக்கவும் வழி வகை செய்ய எண் ஒன்றுக்கு 50 சதவீதம் மானியமாக ரூ.4 லட்சம் மானியம் அனுமதிக்கப் படுகிறது. மேலும், இத்திட்டத்தில் தேர்வு செய்யப்பட்ட விவசாயி களுக்கு வீரிய ரக காய்கறிகள் மற்றும் உயர் விளைச்சல் ரக காய்கறிகள் சாகுபடி குறித்து தொழில் நுட்ப பயிற்சி அளிக்கப்பட உள்ளது. இவ்வாறு அவர் கூறினார். இந்த ஆய்வின் போது கலெக்டரின் நேர்முக உதவி யாளர்(வேளாண்மை) கனக சபை, தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் இந்திரா உள்பட வேளாண்மைத்துறை அலுவலர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# முல்லைப்பெரியாறு அணையில் மதகுகள் வழியாக தண்ணீரை வெளியேற்றி துணை கண்காணிப்பு குழுவினர் சோதனை



தேனி முல்லைப்பெரியாறு அணையில் மதகுகள் வழியாக தண்ணீரை வெளியேற்றி துணை கண்காணிப்பு குழுவினர் சோதனை செய்தனர். முல்லைப்பெரியாறுஅணை

தமிழக-கேரள மாநில எல்லையில் முல்லைப்பெரியாறு அணை அமைந்து உள்ளது. தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களின் நீராதாரமாக இந்த அணை திகழ்கிறது. இந்த அணை யின் மொத்த நீர்மட்டம் 152 அடி ஆகும். ஆனால் கடந்த 1979-ம் ஆண்டு அணையின் நீர்மட்டம் 136 அடியாக குறைக்கப்பட்டது. நீர் மட்டத்தை உயர்த்துவது தொடர்பாக தமிழக அரசு தொடர்ந்த வழக்கை விசாரணை செய்த உச்சநீதிமன்றம், நீர்மட்டத்தை 136 அடியில் இருந்து 142 அடியாக உயர்த்திக் கொள்ளலாம் என்று அனுமதி அளித்து கடந்த மே மாதம் 7-ந்தேதி உத்தரவிட்டது. மேலும், அணையின் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு பணிகளை ஆய்வு செய்வதற்காக 3 பேர் கொண்ட கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டது. துணை குழு ஆய்வு

இந்த மூவர் கண்காணிப்பு குழு மூலம் 5 பேர் கொண்ட துணை கண்காணிப்பு குழு அமைக்கப்பட்டது. இந்த குழுவில் தலைவராக மத்திய அரசின் பிரதிநிதியும், இரு மாநிலங்களில் இருந்தும் தலா 2 பிரதிநிதிகள் உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டனர். அதன்படி துணை கண்காணிப்பு குழு தலைவர் ஹரீஷ்கிரீஷ் தலைமையில் அக்குழுவினர் முல்லைப் பெரியாறு அணையில் நேற்று ஆய்வு செய்தனர். அவருடன்

தமிழக அரசின் பிரதிநிதிகள் மாதவன், சவுந்தரம், கேரள அரசின் பிரதிநிதிகள் பிரசீத், ஜார்ஜ் டேனியேல் ஆகியோர் ஆய்வில் பங்கேற்றனர்.

காத்திருந்த குழுவினர் ஆய்வுக்காக பகல் 11.30 மணியளவில் துணை கண்காணிப்பு குழுவினர் முல்லைப் பெரியாறு அணைக்கு வந்தனர். ஆனால் அந்த சமயம் இடுக்கி மாவட்ட கலெக்டர் அஜித்குமார் பாட்டீல், அணையில் திடீர் ஆய்வு மேற்கொண்டதால் துணை கண்காணிப்பு குழுவின் ஆய்வுக்கு தாமதம் ஏற்பட்டது. 1.30 மணியளவில் இடுக்கி கலெக்டர் ஆய்வை முடித்து செல்லும் வரை துணை கண்காணிப்பு குழுவினர் அணை பகுதியில் காத்திருந்தனர். கலெக்டர் ஆய்வை முடித்துக் கொண்டு புறப்பட்டு சென்றதும், துணை குழுவினர் அணைக்கு சென்று ஆய்வு செய்தனர். பேபி அணை, பிரதான அணை ஆகியவற்றை ஆய்வு செய்தனர். பின்னர் மதகு பகுதிக்கு சென்று ஆய்வு செய்தனர்.

தண்ணீரைவெளியேற்றிசோதனை

உபரி நீரை வெளியேற்ற அமைக்கப்பட்டு உள்ள 13 மதகுகளில் 13-வது மதகில் பல்சக்கரம் பழுது அடைந்து இருந்ததால் அதனை புதிதாக மாற்றும் பணி நடந்தது. இதற்காக சென்னையில் இருந்து 2 பெரிய பல் சக்கரங்கள் மற்றும் 2 சிறிய பல் சக்கரங்கள் கொண்டு வரப்பட்டன. அவற்றை 13-வது மதகில் பொருத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது. மேலும் இரண்டு பல் சக்கரங்களுக்கு இடையிலும் சுழலும் வகையில் இரும்பு குழாயும் புதிதாக மாற்றப்பட்டது. கடந்த 2 நாட்களுக்கு முன்பு தொடங்கப்பட்ட இந்த பணி மிக துரிதமாக மேற்கொள்ளப்பட்டது. தமிழக பொதுப்பணித்துறை அதிகாரிகள் குழுவின் நேரடி மேற்பார்வையில் நடந்த இந்த பணி நேற்று நிறைவடைந்தது. இதையடுத்து துணை கண்காணிப்பு குழுவினர் இந்த மதகின் செயல்பாட்டை சோதித்து பார்க்க முடிவு செய்தனர். அதன்பேரில் பிற்பகல் 3.30 மணியளவில் 13-வது மதகை திறந்து தண்ணீர் வெளியேற்றி சோதனை செய்து பார்க்கப்பட்டது. சுமார் 5 நிமிட

சோதனைக்கு பிறகு அந்த மதகு நல்ல நிலையில் இருப்பது உறுதி செய்யப்பட்டது. பின்னர் 12-வது மதகும் திறந்து தண்ணீரை வெளியேற்றி சோதனை செய்து பார்க்கப்பட்டது. திறக்கப்பட்ட மதகுகள் சில நிமிடங்களில் மீண்டும் இறக்கப்பட்டன. மதகுகளில் அளவுகோல் மதகுகள் சீராக இயங்குவதை துணை கண்காணிப்பு குழுவினர் உறுதி செய்தனர். மேலும் மதகுகளில் உபரிநீரை வெளியேற்றும் அளவை கணக்கிட அளவுகோல் பொருத்தப்பட்டு உள்ளன. அனைத்து மதகுகளிலும் இந்த அளவுகோல் பொருத்தப்பட்டு உள்ளது. அதனையும் துணை கண்காணிப்பு குழுவினர் பார்வையிட்டனர். இதையடுத்து துணை கண்காணிப்பு குழுவினர் அணையில் இருந்து வல்லக்கடவு வழியாக ஜீப்பில் புறப்பட்டு சென்றனர். முல்லைப் பெரியாறு அணையின் மதகுகள் பழுதாக உள்ளதாகவும், நீர்மட்டத்தை 142 அடியாக தேக்க அனுமதிக்கக்கூடாது என்றும் கேரள அரசு சார்பில் கடந்த சில நாட்களுக்கு முன்பு சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த சூழ்நிலையில் மதகுகள் சரியாக இயங்குவதை துணை கண்காணிப்பு குழுவினர் உறுதி செய்து விட்டனர். முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் நேற்று மாலை 141.40 அடியாக இருந்தது.